**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.47
https://ngmtamil.in/

# சங்க காலப் பெண்களும் சமூக உணர்வும்

**முனைவர் செ.ஜமுனா,**

தமிழ் உதவிப்பேராசிரியர், என்ஜிஎம் கல்லூரி, பொள்ளாச்சி.

## முன்னுரை

சங்க காலத்தில் பெண்கள் கல்வி, விருந்தோம்பல், குடும்பப் பொறுப்பு, வீரம் ஆகியவற்றில் சிறந்து இருந்தனர் என்பது நாம் அறிந்ததே. அதற்கு மேலும் சமூக உணர்வும் அவர்களிடையே மேலிட்டிருந்தது என்பதையும் சங்கப் பாக்கள் எடுத்துரைக்கின்றன. சுற்றுச்சூழல் பற்றிய உணர்வு, நாட்டின் மீதான அக்கறை மற்றும் சமூகதின் மீதான அக்கறையும் அன்றைய பெண்களுக்கு இருந்ததை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இலக்கியப் பங்களிப்பு

பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கி இலக்கியப் படைப்பாளிகளாகவும் திகழ்ந்துள்ளனர். ஔவையார், தக்கைப் பாடினியார், நக்கண்ணையார், பாரி மகளிர், பொன்முடியார், பெருங்கோப்பெண்டு போன்ற பெண்பாற்புலவர்கள் இலக்கியத் தொண்டாற்றியுள்ளனர். பொன்முடியார் தான் பாடிய பாடலில் சமூகத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்குமான கடமையைக் கூறுகிறார்.

**“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொள்ளற்குக்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே**
**ஒளிறு வாளரஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து**
**பெயர்தல் காளைக்குக் கடனே”** (புறநானூறு.312)

என்ற பாடலைப் படிக்குந்தொறும் பெருமிதம் ஏற்படுகிறது. புலவர் ஒவ்வொருவரின் கடமையையும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் இப்பாடலால் தாய்மையின் மன இயல்பைத் தெளிவாக அறிய முடிகிறது. 'என் தலைக் கடனே' எனும் போது அக்கால மகளிருக்கு இருந்த கடமை உணர்வையும் உணர முடிகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மேலும் 1) அவ்வையார்-58, 2) அஞ்சில்அஞ்சியார்-1, 3) அஞ்சியத்தைமகள் நாகையார்-1, 4) அள்ளூர் நன்முல்லையார்-11, 5) ஆதிமந்தியார்-1, 6) ஊன் பித்தையார்-1, 7) ஒக்கூர் மாசாத்தியார்-8, 8) கச்சிப்பேட்டு நன்னாகையார்-6, 9) கழார்க்கீரின் எயிற்றியார்-9, 10) காக்கைப்பாடினி நச்செள்ளையார்-2,(பதிற்றுப்பத்து 51-60), 11) காவற்பெண்டு-1, 12) காமக்கனிப்பசலையார்-1, 13) குறமகள் இளவெயினி-1, 14)குமிழி ஞாழல் நப்பசையார்-1, 15) தனயங்கண்ணியார்-1, 17,18) பாரி மகளிர்-1, 19) பூங்கணுத்திரையார்3, 20)பெருங்கோப்பெண்டு-1, 21) பேய்மகள் இளவெயினியார்-11, 22) பொன்மணியர்-1 23) பொன்முடியார்-3, 24)பொதும்பில் புல்லளங்கண்ணியார்-1, 25) பெருங்கோழி நாய்கண் மகள் நக்கண்ணையார்-6, 26) நல்வெள்ளியார்-2, 27) நன்னாகையார்-2, 28) நெடும்பல்லியத்தையார்-1, 29) மதுரை ஓலைக் கடையத்தார் நல்வெள்ளையர்-2, 30) மதுரை நல்வெள்ளியார்-1, 31) மாரிப்பித்தியார்-2, 32) மாறோக்கத்து நப்பசலையார்-8, 33) முடத்தாமக் கண்ணியார்-பொருந ராற்றுப்படை, 34) முள்ளியூர்ப் பூதியார்-1, 35) வருமுலையாரித்தி-1, 36) வெறி பாடிய காமக்கண்ணியார்-5, 37) வெண்ணிக்குயத்தியார்-1, 38) வெண்மணிப் பூதியார்-1, 39) வெள்ளிவீதியார்-13 ஆகிய 39 பெண்பாற்புலவர்கள் இலக்கியங்களில் தங்களது பங்களிப்பை நல்கியுள்ளனர்.

**சமூக உரிமை**

கல்விப் புலமை உடைய பெண் புலவர்கள் சமூக நிலையில் நன்கு மதிப்புடையவர்களாக இருந்தனர். அதியமான் தனக்குக் கிடைத்த ஆயுளைக் கூட்டும் அதிசய நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்தான். இது நன்கு படித்த பெண்கள் சமூகத்தால் எவ்வாறு மதிக்கப்பட்டனர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதனை,

**"ஆர்கலி நறவின் அதியர் கோமான்**
**....................................**
**கானல் காரிகைக் கவின் பெறத், தீங்கனி**
**உண்க, பிறரும், அவர்தம் உண்ணார், சாதல் நீங்க**
**எமக்கு ஈந்தனையே"** (புறநானூறு .91)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சமூக மேம்பாட்டிற்காக புலவர்கள் நீண்ட காலம் வாழ வேண்டும் என்ற நாட்டு மன்னனின் கடமை உணர்வையும் இதன்வழி அறியமுடிகிறது.

**சமூக உணர்வு**

சங்ககாலப் பெண்கள் தாம் வாழ்ந்த மண்ணும், நாடும், நாட்டு அரசனும் சிறப்புடன் வாழ வேண்டும், வளமுடன் இருக்க வேண்டும் என்பதில் சமூக உணர்வுடன் திகழ்ந்துள்ளனர். அதிலும் ஐங்குறுநூற்றில் வரும் பெண்கள் சமூக உணர்வு மிகுந்தவர்களாக இருந்ததைக் காண முடிகிறது . சான்றாக ,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**"வாழி ஆதன் வாழி அவினி**

**நெற்பல பொலிக பொன் பெரிது சிறக்க**

**என வேட்டோளே யாயே யாமே" (ஐங்குறுநூறு.1)**

**"பசியில் ஆகுக பிணிகேன் நீங்குக." (ஐங்குறுநூறு .5)**

**"அறநனி சிறக்க அல்லது கெடுக" (ஐங்குறுநூறு .7)**

**"நன்று பெரிது சிறக்க தீதில்ஆகுக" (ஐங்குறுநூறு .9)**

**"மாரி வாய்க்க வளநனி சிறக்க" (ஐங்குறுநூறு .10)**

என்ற முதல் பத்தின் வரிகளிலேயே அக்காலப் பெண்களின் சமூக உணர்வு வெளிப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. தன் நாட்டை ஆளும் மன்னனை வாழ்த்துகிறாள். பின் நாட்டில் நெல் வளமும் பொன்னும் பெருக வேண்டும் என்றும், பசி நீங்கி நோய்கள் இல்லாமல் போக வேண்டும் என்றும், அறம் சிறந்து விளங்கி தீயவை ஒழிய வேண்டும், என்றும் நல்லவை சிறந்து பெருக வேண்டும், தீமை இல்லாமல் போக வேண்டும் என்றும், மழை நன்றாகப் பெய்து வளம் பெருக வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளும் பெண்களின் எண்ணங்களின் உணர்வை இதன் வழியாக உணர முடிகிறது. மேலும் ஐங்குறுநூற்றில் வரும் பெரும்பாண்மையான பாடல்கள் இவ்வாறாகப் பெண்களின் சமூக உணர்வை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

**சுற்றுச்சூழல் பற்றிய உணர்வு**

சங்ககாலப் புலவர்கள் தாம் வாழ்ந்த நிலத்தின் சுற்றுச்சூழல் பற்றிய உணர்வினை நிரம்பவே பெற்றுள்ளனர். அதனை மற்றவர்களுக்கு வலியுறுத்த தம் பாடல்களில் சுற்றுச்சூழலைச் சார்ந்த அறிவினை உணர்த்தும் வகையில் அமைத்துப் பாடியுள்ளனர். நற்றிணையில் வரும் பாடல் ஒன்றில் பெண்கள் தங்கள் விளையாடும் போது மறந்து மணலில் விட்டு வந்த புன்னையின் விதை முளைத்தது. அதனை அச்சிறு பெண்ணின் தாய் நெய்யும் பாலும் ஊற்றி வளர்த்து தன் பெண்ணிற்குத் தங்கை போன்றது என அப்புன்னை மரத்தைப் பற்றிக் கூறினாள்.

**"விளையாடு வாய மூடு வெண் மணல் அழுத்தி**

**மறந்தனம் துறந்த காழ் முளை ஆகைய**

**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**

**நம்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**

**அன்னை கூறினள் புன்னையது நலனே"** (நற்றிணை .172)

என்ற பாடலில் அன்னை புன்னை மரத்தைத் தனக்குத் தங்கை எனக் கூறியதால் தலைவி தலைவனுடன் அம்மரத்தருகில் நின்று பேசி நகையாடுவதற்கு நாணுகிறாள் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் மரங்களையும் உறவு முறை கூறிக்கொள்ளும் சுற்றுச்சூழல் அறிவு இருந்ததை அறிய முடிகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

சங்க காலப் பெண் தான் வளர்த்த வள்ளைக் கொடியைப் பசு மேய்ந்து விட்டது என வயிற்றில் அடித்துக் கொண்டு அழுகிறாள் என்பதை

**"இல் எழு வயலை ஈற்று ஆ தின்றெ‌ன**

**பந்து நிலத்து எறிந்து பாவை நீக்கி**

**அவ்வயிறு அலைந்த என் செய்வினைக் குறுமகள்** (நற்றிணை. 179)

இப்பாடல் வரிகள் விளக்குகின்றன. தலைவி சிறு பருவத்தினள் என்பதால் தான் வளர்த்த வயலைக் கொடியைக் கன்று ஈன்ற பசு மேய்ந்து விட்டது எனத் தான் கையில் வைத்திருந்த பந்தையும், பாவையையும் எறிந்து விட்டு வயிற்றில் அடித்துக் கொண்டு அழுகிறாள் என்பதால் இயற்கையின் மீதும் சுற்றுச்சூழல் மேலும் அக்கால பெண்கள் கொண்டிருந்த உணர்வுப் பூர்வமான உறவினை அறிய முடிகிறது.

**சமூக அக்கறை**

சங்கப்பாடல்களில் பெண்களின் வீரத்தை போற்றும் வகையில் அமைபவை மூதின் முல்லைப் பாடல்கள். அவ்வகையில் புறநானூற்றில் முதல் நாள்ப் போரில் தன் தந்தையை இழந்தால், அடுத்த நாள் போரில் தன் கணவனை இழந்தால் ஆயினும் மனம் தளராமல் மூன்றாம் நாள் போருக்குத் தன் ஒரே இளைய மகனைத் தலைவாரி வெள்ளை உடை உடுத்தி, வேலைக் கையிலே கொடுத்து போர்க்களம் நோக்கி செல்க என்று கூறி அனுப்புகிறாள் ஒரு வீரப் பெண். இதனை,

**"மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை**

**யானை எறிந்து களத்து ஒழிந்தனனே,**

**நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்**

**பெரு நிரை விலங்கு, ஆண்டுப்பட்டனனே,**

**இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி**

**வேல் கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇ**

**பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி**

**ஒரு மகன் அல்லது இல்லோள்**

**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே"** (புறநானூறு. 279)

என்ற பாடல் விளக்குகிறது. தனக்கு ஆதரவான தந்தை மற்றும் கணவன் ஆகியோரைப் போரில் இழந்தும் தன் சிறுமகனை விருப்பத்துடன் நாட்டுக்காகப் போருக்கு அனுப்பும் வீரத்தாயின் நாட்டுப்பற்றையும் சமூக அக்கறையையும் இதனால் அறிய முடிகிறது.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

**முடிவுரை**

மேற்கண்ட பலவாறான சான்றுகளினால் சங்ககாலத்தில் பெண்கள் சமூகத்தின் மீது கொண்ட அக்கறை, சமூகத்திற்காக அவர்கள் செய்த தியாகம் ஆகியவற்றை அறிய முடிகிறது. இவ்வாறாகப் பெண்கள் தங்களுக்கென தனி இடத்தை அமைத்துக் கொண்டு தங்களது குடும்பப் பொறுப்புகளுடன் நில்லாமல் பரந்துபட்ட சமூகச் சிந்தனைகளையும் பெற்றுத் திகழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**Acknowledgement : Would Like To Thank the Management of NGM College, Pollachi, Tamil Nadu, for their generous financial assistance through the SEED Money Support for this research work.**